உ

கடவுள் துணை.

# சூரிய நமஸ்காரப் பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூலபுத்தகங்களும். அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும்; அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்கார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

கடவுள் துணை.

# சூரியநமஸ்காரப்பதிகம்.

காப்பு-நேரிசைவெண்பா.

மின்னுசூரியன்மீது மேவச்சிறுபதிகம்
பன்னும்படியெனக்குப் பாலிப்பாய்-தன்னுங்
கடவாரணனே காண்பரியகாரணனே
யிடமாகுமுன்மரைத் தாள்.

ஆசிரியவிருத்தம்

வீதிவெளி யாகாசமீதிற் பிரகாசமாய் மெய்ஞ்ஞா
னதீபசுடராய் வெளியாகி யொளியாகி விந்துசுழிமுனை
மீதில் விளையாடுமோங்காரமாய், ஓதுமுதலைந்தெழுத்து
பதேசமந்திர முரைக்கின்ற சற்குருவுமாய், உருவாகி
யுயிராகி வுயிருக்குளறிவாகி யூடாடிநின்ற வுணர்வாய்
ஆதிமுதலாகவள ரண்டபகிரண்டங்க ளாயிரத்தெட்டு
மாகி அறுநூற் றிருபத்துநாலு புவனங்களுமாண்ட ம
யமானநிறமாய் சோதிமயமான பரிபூரணவிலாசமிகு
சூட்சரதமீதேறியே, துலங்குகதிர் மதிறெனவிளங்கு சி
வசங்கர சூரியநாராயணசுவாமியே (க)

இன்பசுகமாகவும் பூமியாகாசமு மேகாந்தவைபோகமு மீரேழுபதினான்கு லோகங்களத்தனையு மிரட்சிக்கு மீஸ்வரனுமாய் அம்பரதிகம்பர பரம்பரவ நாகதவநாதியொளியானவெளிய ய் ஆனந்தநடனமிடு முத்தண்டமாசவே யாடியசபாபதியுமாய் வம்பரொடுகால னெமதூதரணுகாமலே வந்தருள் புரிந்துநிதமும் வளர்கின்றகைலாச பரமபதகொடிமுனையின் வரையினை வணங்கிமுடிவார் துன்பமெனுநரகவழி வீழாமல்ரட்சியுஞ்சோதிரதமீதேறியே துலங்குகதிர்மதியென விளங்குசிவசங்கர சூரியநாரயணசுவாமியே. (உ)

உக்கிரமிகுமக்கினி சொரூபவடிவாகிய யோங்காரரூபமாகி யொளியாகிவெளியாகி யுதயகிரிமீதினி லுதிக்கின்ற தெய்வமாகிச் சகல புவனங்களுந் தானாகிநின்றவொருசச்சிதானந்தமயமாய்ச் சாலோகசாமிபசாரூபசாயுச்ய சகலசூட்சுமதாரியாய் விக்கிரசிவலிங்கவடி வாகவுமிகுந்த சதுர்வேதாந்த முத்திமுதலாய் வெகுகோடிகாலங்க ளுன்னையே நம்பினேன் வேதனே பரநாதனே சுக்ரகெம்பீரபரி பூரணவிலாச வர்ச்சுனன்*மீதேறியே துலங்குகதிர்மதியென விளங்கு சிவசங்கர சூரியநாராயணசுவாமியே (௩)

---


* அர்ச்சுனன் மச்சை.

சாஸ்திர புராணமுதல் வேதவேதாந்தமிகு சர்வத் தபோதனர்களுஞ் சகலமாதேவருஞ் சகலமாமுனிவருஞ் சகலசீவன்களுடனே நேத்திரமதாகவே குறியாகிநெறியாகி நிருமலசொரூபமாகி நிகழும் சிருஷ்டிதிதிசம்மாரவதிகார நின்றதிரு மூர்த்தியாகி காத்திரமதாயைந்து பஞ்சபூதங்களுங் கருணைகடாட்சமுடனே கண்டுகளிகூர்ந்திடும் விண்டபரிபூரண கலைக்கியானவேதமுதலே சூத்திரந்தாவி விளையாடுமானந்தச் சுயம்புரத மீதேறியே துலங்குகதிர்மதியென விளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே. (சு)

நிறையானசுக்கிலஞ் சுரோணிதங்கருவூரி னின்றுமொன்றுகவேதான் நிலையான முக்கோண சக்கரந்தன்னிலே நிதாகாரகமலமீதில் அறையானநிலைவீடு மறுகோணமாகியு மாங்கார வோங்காரமாய் ஆடிவிளையாடி நடமாடிய பராபரா வச்சுதானந்தமெனவே குறையான வன்னியின் கெற்பமதில்வாசமுங் குடியாக முந்நூறுநாட் கொண்டவோர்தாவதனை விண்டுபின்பூமியிற் குழந்தையாய் வந்துவளரும் துறையானபாதகவழிவீழாமல் செய் சொர்னரதமீதேறியே துலங்குகதிர்மதியென விளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே. (ரு)

இரத்தமொடு மாமிசமு மத்தியொடுரோமமு நரம்புதோலென்புமுயிரும் நாடியொடுசிலேட்டுமம் வாதபித்தங்களும் நாறுமனை தசவாய்வுடன் சத்தபரிசத்திநெடு ரூபரசகந்தமுஞ் சகலாதிதப்பொருளுமாய்ச் சரணாரவிந்தமிரு கண்களிரு வகையுமாய்ச் சார்வையிறுநாபியுடனே உற்றகமலந்தனி லுற்றவுயிராகவே ஊடாடிநின்றவுணர்வாய் ஓங்கார ரீங்கார வாங்கார ரூபமா யோரெழுத் தாகவேதான் சுத்தகெம்பீர பரிபூரணவிலாச வெகுசூட்ச ரதமீதேறியே துலங்குகதிர்மதியென விளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே. (சூ)

நிலையிலாச் சமுசார வாழ்வைநிஜமென்றெண்ணி நினைவு தடுமாறுமலும் நிஜரூபமாகவே காட்சிதந்தென்னையாண்டு நியமிக்கவிதுசமயமே அலையாமலீரேழுபதினான்குலோக மனுவுக்கு ளணுவாகியே அரியபரபிரம்மாதி யவதாரசிங்கார வகோரவக்கினிரூபமாய் மலையாளகைலாச கிரிகளொடுபரமபதம் மகமேருவைகுந்தமும் வாசமிகுவானதொரு வீதியாகாயமதில் வளரும் பிரகாசவொளியே தொலையாதசனனமதில் முன்செய்ததீவினைத் துயர்தீரரதமேறியே துலங்குகதிர்மதியென விளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே. (எ)



உ

கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்.

சைவசமையாசாரியர்

# நால்வர் தாலாட்டு.

## காப்பு.

மால்வணங்கிப் போற்றுமழ விடையான் வண்புகழ்தேர்
நால்வரருட் டாலாட்டு நானியம்ப—நூல்வழியிற்
சந்ததமுஞ் சிந்தைசெயுந் தண்டைபுனை செஞ்சரணக்
கந்தமத தந்திமுகன் காப்பு.

உ

கடவுள் துணை.

# ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள்.

சம்பந்த வாதமாயாக் காதல்கொள மணப்பேய்கள்
வெம்பந்தக் களைகணீங்க வியன்சைவப் பயிர்தழைக்க
நம்பந்த ரங்கபத்தி நாடுவோர்க் கருளுஞான
சம்பந்தப்பிள்ளையார்தஞ் சரணித முடிமேற்கொள்வாம்.

ஆராரோ - ஆராரோ
ஆராரோ - ஆராரோ

மஞ்சுறங்கு நீள்புரிசை
மாகாழிக் கவுணியர்தம்
மிஞ்சுகுல சிவபாத
விருதயர்தங் கண்மணியோ. 1

ஆயிழையார் பல்லோருள்
அன்புநிறை நாயகமாம்
தாயெனவே பகவதியார்
தமைக்கொண்ட விண்மணியோ. 2

மேலாஞ் சிவபாத
விருதயர் நீராடுகையில்
நாலாரணங் துதிக்கு
நாயகிபா லுண்டவனே. 3

உண்ட வமுதுகண்
டேட்டினவ ரார்கொலெனப்
பண்டை யொளியைச் சுட்டிப்
பன்னுந்தவமுதலோ. 4

வேதங் கடந்தவனை
விண்ணோர்க ளேத்துதமிழ்
வேதந் தனிலே
விளக்கவந்த மெய்ப்பேறே. 5

கொல்லோமோர் சிற்றுயிருங்
கொல்வ மடியாரையென்றும்
வெல்வோமென் றெண்ணமணர்
வேர்களையுங் கோளரியோ. 6

நற்றா மரைக்கரத்தில்
நம்பனருளா லிரண்டு
பொற்றாளம் பெற்றவன்றன்
புகழ்பாடு புண்ணியனே. 7

எண்டிசையும் புகழ்ந்தேத்து
மெழில்விளங்கு மோர்தராளத்
தண்டிகையிற் றனமர்ந்து
தமிழோது தற்பரனே. 8

அன்புவளர் மாமயிலை
யணிவணிகர் குலமாதி
னென்புவளர் பெண்ணுருவா
யியங்கவரு ளல்கினனே. 9

மறைநான்கும் பூசித்த
மறைக்காட்டிற் கதவுதமிழ்
மறைப்பாடி யடைப்பித்த
மறைஞானக கண்மணியோ. 10

இப்படியிற் கூன்மார
னெய்துசுர வெப்புமவ
வெப்புமொழித் தருள்காழி
விரகனெனும் விஞ்சையனே. 11

அருஞான மாருயிர்கட்
களிக்கவுல கினிலுதித்து
திருஞான சம்பந்தச்
சீர்ப்பேர்கொள் சின்பயனே. 12

ஸ்ரீ சம்பந்தாயநம:

ஸ்ரீ சம்பந்தசுவாமிகள் தாலாட்டு

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

அப்பரா வணியும்வேணி யரனடி யகத்துளேதோ
யப்பரா விப்பணிந்தைந் தெழுத்தினு லலையை நீந்தி
யப்பரா வமுதமேய்ப்ப வருளுருவான வெங்க
ளப்பரா ஞானமூர்த்தி யடிகளை யகத்துள் வைப்பாம.

அன்றுமறை பூசித்தே
யடைத்தகதவுந் திறக்கத்
தின்றுசுவைத் தமிழ்மறையைச்
சொன்ன வருட்கடலோ. 1

ஆவலொடு சீர்காழி
யண்ணல் சிவிகைசுமந்தே
யேவலரை வினவ
ஈங்குற்றே னென்றவனே. 2

இன்பருளும் பைஞ்ஞிலி
யெழிற்பதியிற் கட்டமுத
மன்பர்களுக் கருளரனு
லடைந்தபர மாற்புதனே. 3

ஈனமிலா வரமாத
ரெழிலாரு மிருளையருண்
ஞானவொளியால் வென்று
நாதனருள் பெற்றவனே. 4

உண்மாசு கழிப்பதர
னெண்சைவ விரதமெனக்
கண்மாசு படுமவுணக்
கழுதுகட்குத் தெரித்தவனே. 5

ஊனதனி லொளித்துறையு
மொருவனையே யுள்கிவிடம்
வானமிர்த மெனமகிழ்ந்து
வாய்மடுத்துண் டிருந்தவனே. 6

எண்ணரிய சமணர்கட
லிட்டகற்றூண் மிதந்திடவெண்
சுண்ணவறை தடமாகச்
சுகமுற்று மீண்டவனே. 7

ஏதமுறு மமணர்களா
லேவியவெங் கரியதனை
நாதனருட் பண்பாடி
நாணவைத்த நாயகமே. 8

ஐயனெனத் துதிசெய்
யப்பூதி சேயைமுனம்
வையமிசை வரவழைத்த
வான்புகழு கற்றவனே. 9

ஒண்ணகைசேர் திலதவதி
யுடன்றோன்றி சூலைகெடப்
பண்ணிற் கூற்றாயினவா
பாடுசிவ பாக்கியனே. 10

ஓங்கவிலா வமண்சமயத்
துட்கிடையை யறிவிப்பான்
தீங்கில்மரு ணீக்கியராந்
திருநாமம் பெற்றவனே. 11

ஔவியமில் திருநாவுக்
கரசரெனு நாமத்தைச்
செவ்விதாய்த் துதிசெய்யிற்
சித்தியெலாந் தருவானே. 12

ஸ்ரீ வாகீசாயநம:

திருநாவுக்கரசு சுவாமிகள் தாலாட்டு

முற்றிற்று.

கடவுள் துணை.

# ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

—— *) ——

சுந்தரக்கரையுளான்றன் கருணையாற்கரா முன்னுண்டே
அந்தரஞ் சென்றமைந்த னுருயிரழைத்து நல்வி
தந்தரத் தமிழ்பண்பாடித் தலைமைபெற் றுயர்ந்தஞானச்
சுந்தர மூர்த்தியார்தந் துணையடி துதித்துவாழ்வாம்.

அரனடிக் கணன்புற்புறே
ரனைவர்களுஞ் சீர்தூக்குந்
திரமுடைய விசைஞானி
செய்தவமாய் வந்தவனே. 1

அன்புடனேயுச்சியைமோந்
தணைத்துகந்தெ னப்பாவென்
றின்புடைய சடையனு
ரேத்தவந்த வெழின்மணியோ. 2

அய்யரடிப் பெருமையினு
லருளுருவ மாய்வந்த
துய்யசடங் கவிமகடான்
துணைவியென வந்தவனே. 3

அறியவொண்ணா வமலருமே
யம்மணத்தில் வந்துமுன்னாண்
முறியோலை காட்டவவர்
முற்போரைத் தொடுத்தவனே. 4

அகிலமதி லந்தணர்க
ளந்தணர்க்கா ளாதலெந்த
விகிதத்து மொவ்வாதோய்
விப்பரனே யென்றவனே. 5

அவனியி லில்லாவார்த்தை
யறைந்தனையே பித்தாவென்
றவனுறையும் வெண்ணெய்நல்லூர்க்
கருட்பதிகஞ் சொன்னவனே. 6

அரனளித்தவரும்பொருள்க
அனைத்தையுமாற்றிட்டுநன்னீர்
பரவியதோர் தடத்தெடுத்த
பாக்கிய சிகாமணியோ. 7

அங்கையில்மான் மழுவேந்து
மரன்றனையே பரவையெனும்
மங்கைபாற் றூதனுப்பும்
மாண்பறிந்த மன்னவனே. 8

அங்கமோ ராறுநவ
லங்கணனைப் பாடிமண்ணுஞ்
செங்கறனைப் பொன்னாகச்
செய்யவல்ல திண்ணியனே. 9

அருமறைசொல் குண்டையூ
ரரனருளு மரிகுற்றப்
பெருமைமிகு பூதகணம்
பெற்றவருட் பெருந்தகையோ. 10

அம்புவியாள் சேரெனும்வெள்
ளானைமீ தேர்ந்துவரத்
தும்புரு நாரதர்போற்றித்
தொழுங்கயிலை கண்டவனே. 11

அண்டர்களேத்தித் துதியைந்
தக்கரத்தா னன்பொடுவன்
றொண்டனெனச் சொன்னதொடு
சுந்தரப்பேர் பூண்டவனே. 12

ஸ்ரீ சுந்தராய நம:

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாலாட்டு

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்.

——(o)——

பானித்தலின் றிவெள்வேற்பாண்டியனளித்தபொன்னால்
வேணிக்கண் வேணிவைத்த விமலனற்புதவதீத
ஆணிக்கனக மன்றுடுமய்யர் மந்திரமமைத்த
மாணிக்கவாசகக் கோன்மலரடி சென்னிவைப்பாம்.

கண்மணியி னொளிபோலிக்
கடலுல கெலாங்கொலிப்ப
விண்மணியாகிய ஞான
விழியளிக்கும் வித்தகனே. 1

கானகவில் குருந்தடிக்கீழ்க்
கண்ணுதல்மெய்ச் சிவஞான
மோனமாம் பரம்பொருள்சீர்
மொழியப்பெற் றுய்ந்தவனே. 2

கிள்ளைகள்பண் செய்மதுரைக்
கீர்த்திமிக்க பாண்டியனால்
வெள்ளைமதிச் சடையனடி
மேவச்செய் வித்தகனே. 3

ஈதமிகு மெழில்மதுரைக்
கேடிலாக் கோமாற்காய்
ஏதமிலா நரிபரியா
யிசையவருள் பெற்றவனே. 4

குற்றமிகும் பவுத்தர்கள்முன்
சொற்றவன் மூகைப்பெண்
உற்றரனார் சீர்பாட
வுவந்தருளு மருந்தவனே. 5

கூறரிய சைவத்தின்
கோட்பாட்டை நிந்திக்கு
மாறறிந்த புத்தர்களை
வாதில்வென்ற வண்மையனே. 6

கெடுதலிலா வருளரனார்
கிருபையுட னேடெழுதப்
படுகலஞ்சேர் திருக்கோவை
பாடியசற் பாத்திரனே. 7

கேள்விமிகு மறிஞர்களால்
கிளர்நான்கு மறையோதி
வேள்விசெயு மந்தணரால்
வியந்துதொழு மேலவனே. 8

கைலிலா மலகமெனக்
கற்றவர்கள் களிகூரப்
பொய்யிலா மறைதமிழில்
புகன்றபெரும் புங்கவனே. 9

கொண்டலென வுயிர்கள்களி
கொள்ளவுயர் ஞானநெறி
மண்டலத்திற் றெளிந்துயச்சீர்
வாசகத்தைப் பொழிந்தவனே. 10

கோதிறிரு வாதவூர்க்
கோனெனு நாமத்தொடுமை
மாதிறைவன் பாதத்தை
மறவாத மாமணியோ. 11

கௌவைபுரி புத்தர்மதங்
களைந்திதழி யொண்பிறையான்
எவ்வமில் சீர்நிலைநிறுத்து
மிணையிலா வாசகனே. 12

ஸ்ரீ மாணிக்கவாசகாயநம:

நால்வர் தாலாட்டு

முற்றிற்று.

---

# விளம்பரம்.

## அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக் கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதை முதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் இரகித்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச்செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. கிளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.

வழியென்ற துறைகளை நிலைகளறியாமலே மனது மிகவேகலங்கி மாதர்தன்சுகமானவாசைதனைநிஜமென்று மண்ணுலகிலேயலைந்து பழியென்றதீவினையகற்றிவிடு முன்பாதம் பணியவே யருளுமில்லான் பாழுமென்மனங் குவிய வொன்றுதரிதம்பனம் பண்ணுவதனக்கருமையோ விதியென்றகண்ணொளி யாகவேநின்றுவிளையாடு மணிரூபமாகி மேலானசெல்வமது தந்தருள் புரிந்திடும் வேதவேதாந்தமுதலே சுழியென்றமுனைமீதி லோங்கார மானவதி சூட்சரதமீதேறியே துலங்குகதிர்மதியெனவிளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே. (அ)

அட்டதிசையெட்டுடன் பதினாறுகோணமுமகண்டதொருகாலமீதில் ஆகாசமீதில்வெகு சோதிப்பிரகாசமா யலங்காரதீபசுடரே கட்டமதுவானதொரு கவலையினிதீரவுன் கருணைகடாட்சமுடனே கனயோகஞானமது சேவடி கடந்துநீர் காத்துரட்சித் தருளவே இட்டகுல தெய்வம்நீ ரெந்தனுள்ளத்திருந்துவிளையாடுமவரீ இன்பசுகபோகமுஞ்சம்போகபோகமுமேகாந்தவைபோகமுநீ துட்டகலி காலமது வென்னைவந் தணுகாது துணையாக

ரதமேறியே துலங்குகதிர்மதியென விளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே (௯)

தங்கநதியுங்கனக கோபுரவிமானமுஞ் சதுர்வேத மேற்கலசமுந் தளதளெனமின்ன லொளியான நவரத்தி னந்தரித்தமதிவரிகம்பமும் அங்கமுறு தாகலுறுமனவே கமுங்குதிரை யாங்கார வோங்காரமா யைந்தெழுத்தாய் நின்ற மந்திரசொரூபமதி லருணனே சாரதியுமாய்ச், சி ங்கமுகமென்னுள்ளே வண்டில் கட்டாணியைத் தியான மதினுலிருக்குந் தினந்தினமுமெந்தனிட சிந்தையிலிருந் தருள் திகம்பரமுமானபொருளே துங்கபரிபூரணவிலாச வொளியாகவே சுயம்புரத மீதேறியே துலங்குகதிர்மதி யென விளங்குசிவசங்கர சூரியநாராயணசுவாமியே.

சூரியநமஸ்காரப் பதிகம்

முற்றிற்று

———